**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினுள் கருதுகோள் வாடகை வருமானம் மற்றும் சபை நிதியத்திலான வீதி நிர்மாண செலவினங்கள் ரூபா 266,380 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மூன்று வகைகளுக்குரிய இருப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 98,818 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 87,454 மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,848 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 222,259 தொகையான பணம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 59,060 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

i. பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 1,049,368 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத 28 முற்பண மீதிகளைத் தீர்வு செய்வதற்கும் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கலாக பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 10,240 தொகையான மீதியினை தீர்வு செய்வதற்கும் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. மாகாண குறித்துரைக்கப்பட்ட மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்தும் மூலதன நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரியதாக மீளாய்வாண்டில் பெற வேண்டிய ரூபா 3,149,934 கூட்டுத்தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. 2013 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 516,079 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரிப்பணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

ii. காணிகள் பதிவாளர் அலுவலகத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய முறையே ரூபா 12,300 மற்றும் ரூபா 14,400 தொகை மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

iii. மாகாண குறித்துரைக்கப்பட்ட மானியத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை எழுச்சி பெறச்செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3,149,934 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.

iv. உள்நாட்டு மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு 2015 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 728,243 தொகையான வட்டி மற்றும் 697,784 தொகையான கடன் பணமும், 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,175,159 தொகையான வட்டி மற்றும் ரூபா 1,269,459 தொகையான கடன் பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) 2016 திமெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் தீர்வு செய்யப்படாத பொறுப்புக்களின் மொத்தப்பெறுமதி ரூபா 11,054,878 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 773,148 தொகையான பொறுப்புக்கள் முன்னைய ஆண்டிற்குரியவையாகும். அந்த மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 95,009,946 கூட்டுத்தொகையான காணி, கட்டிடங்கள் மற்றும் பொது உபகரணங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளும், ரூபா 7,094,309 கூட்டுத்தொகையான 05 வகையான வைப்புக்கள் தொடர்பில் விரிவான பட்டோலையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேசபைகள் 193 (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் குறை மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டு ஒவ்வொரு செலவின விடயங்களின் கீழான மிகைகள் அல்லது பற்றாக்குறைகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 371(2), (5) | நான்கு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 7,795 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 396 (ஈ) | வழங்கி 06 மாதங்கள் கடந்த ரூபா 13,377 கூட்டுத்தொகையான 08 காசோலைகள் தொடர்பில் தொடர்புடைய பிரமாணங்களுக்மைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான ரூபா 1,586,690 பெறுமதியான 181 வைப்பு மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய மற்றும் பீஈ/01/01 ஆம் இலக்க மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சின் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக சபையினால் 2,070 வீதி அதிகாரச்சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 1,720 வீதி அதிகாரச்சட்டங்களுக்காக கட்டணங்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய மற்றும் 03/2014 ஆம் இலக்க வட மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான கைத்தொழில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (உ) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய மற்றும் 01/2014 ஆம் இலக்க வட மாகாண தலைமைச் செயலாளரின் சுற்றறிக்கை. | 12 ஊழியர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிப் பணப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (அ) மற்றும் 4.3 (உ) ஆம் இலக்க | சபையில் சேவையில் ஈடுபட்டு 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 141,016 தொகையான மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,331,307 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,907,705 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,423,602 ஆன அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினத்தை ஒப்பிட்டு பார்க்கும் போது 05 நிகழ்ச்சித்திட்டங்களில் 04 நிகழ்ச்சித்திட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,067,888 ஆன வருமானத்தை விஞ்சிய செலவினத்தை காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 87 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சபையின் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்துள்ளதாகவும், சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதாகவும், வருமானத்தின் உதவி கிடைத்திருக்காவிடின் சபையின் வருமானத்தில் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்ய முடியாது என்பதை காட்டியது. செலவினத்தை கட்டுப்படுத்தி குறைந்த மட்டத்தில் பேணுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 16.6 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 13.2 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் 80 சதவீதம் மாத்திரமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.2 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 0.8 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிலுவை வருமானத்தை அறவிடலின் செயன்முன்னேற்றம் சுமார் 36 சதவீதமாகும்.

### 2.3.2 வீதவரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவிற்கமைய வீதவரியும் வரியினை விதித்து அறவிடுவதற்கு 2017 யூன் 30 வரையிலும் தவறியிருந்தது.

### 2.3.3 வாடகை

2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கமைய ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையாவது கடை அறைகள் மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகையினை மாற்றியமைக்க வேண்டும். எனினும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்ககவில்லை. அங்குணகொலபெலெஸ்ஸ 10 கடை அறைகள் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், தெபொக்காவையிலுள்ள 04 கடை அறைகளும் 2007 மார்ச் 20 ஆந் திகதி இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரம் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 59 இற்கு இணங்க கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பில் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆரம்ப நிலுவை மீதி ரூபா 95,065 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான பட்டியலிடல்கள் ரூபா 928,786 தொகையுடன் ரூபா 1,023,851 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. மீளாய்வாண்டினுள், மொத்த அறவீடுகள் ரூபா 933,911 ஆனமையால், ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 89,940 தொகை நிலுவையாக இருந்தது. ஆரம்ப நிலவை மீதியில் 5 சதவீதமான குறைவான பெறுமதியொன்று அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 ஏனைய வருமானம்

சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை சேவையில் ஈடுபடுத்தியமையின் அடிப்படையில், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 542,046 ஆக இருந்ததுடன், அந்த வருமானத்தை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலுவை வருமானத்தினுள் 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 268,046 தொகையான நிலுவை மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப்பணத்திற்காக ரூபா 1,134,071 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 70,720 தொகையும் பெற வேண்டியதாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் டம்ப்ஸ் டிரக் வாகனத்திற்கு 2016 திசெம்பர் 22 ஆந் திகதி நேர்ந்த விபத்து தொடர்பில் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 103(அ), (ஆ) இன் பிரகாரம் உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்பட்டிராததுடன், விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வாகனக் காப்புறுதி**

2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் காப்புறுதி சேவையினை நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், காப்புறுதி பிரதிநிதியொருவருடாக சபையின் 06 வாகனங்களுக்காக ரூபா 272,090 தொகையான காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) விளைவற்ற நிலையில் காணப்படும் 04 வாகனங்களை பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கு அல்லது கைத்தவிர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உத்தேச தகன அறைக் கட்டிடத்தின் நிர்மாண பணிகள் 2016 யூலை 14 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக நிர்மாண நிறுவனத்திற்கு ரூபா 4,868,324 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. தகன அறைக்கு தேவையான உதிரிப்பாகங்களை விநியோகித்து பொருத்தாமையின் அடிப்படையில் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கட்டிடம் விளைவற்றுக் காணப்படுகின்றமையை காட்டியது.

(இ) சபைக்குச் சொந்தமான உள்ளக ரீதியாக இணைக்கப்பட்ட கற்களை அரியும் இயந்திரம் 2016 ஆம் ஆண்டு முழுவதும் கற்களை உடைக்கும் பணியில் ஈடுபடுத்துவதற்கு அல்லது வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு / குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 57,293 பெறுமதியான குழாய் கிணறு உபகரணங்களின் இருப்பு நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்படுவதுடன், அவற்றை பிரயோசனமான பணியொன்றில் ஈடுபடுத்துவதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

சபையினால் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், ஒட்டுமொத்த அதிகாரப்பிரதேசமும் உள்ளடங்கும் வகையில் கழிவினை சேகரித்து அவற்றுள் சேவை பேணப்பட்டிருக்கவில்லை. கழிவு முகாமைத்துவ செலவினத்தை மேவுகைக்குட்படுத்துவதற்காக கழிவு வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்திற்கமைய 06 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 06 வெற்றிடங்கள் நிலவியதுடன், மேலும் 05 பதவிகளின் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 06 ஆகும். வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் மிகை பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மே 11 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையிலும் சபையின் வருமானப் பரிசோதகர் அறிவிக்காது சேவைக்கு சமூகமளிக்காமை மற்றும் மேற்படி முதலாவது திகதி முதல் 2017 சனவரி 16 ஆந் திகதி வரையிலும், அங்கீகாரமின்றி விடுமுறையை பெற்றுக்கொண்டமை தொடர்பில் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளிக்காது, மூன்று மாத காலப்பகுதிக்காக ரூபா 94,082 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. இந்த பணம் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களித்தமைமையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது 36 செலவின விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,626,000 தொகையான மொத்த நிதியேற்பாடும், ஆண்டின் இறுதியில் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 55 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 8,251,943 தொகையான சேமிப்புகள் அவதானிக்கப்பட்டது. மேலும், 03 வருமான விடயங்களின் பாதகமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 3,702,107 ஆகும். அதன் பிரகாரம் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் நிர்வாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல்.